# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 057/மா/2018

ஆணை எண். 67/2018

நாள் : 26/03/2018

தமிழ்நாடு கட்டுமானப் பொறியாளர்கள்
மற்றும் – முறையீட்டு மனுதாரர்கள்
ஒப்பந்ததாரர்கள் சங்கம், சென்னை.

திரு L. நந்தகுமார்,
மேற்பார்வை பொறியாளர்,
சென்னை மாநகராட்சி, – எதிர் மனுதாரர்
சென்னை – 600 003.

சென்னை, தமிழ்நாடு கட்டுமானப் பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் சங்கத்தினிடமிருந்து 23.10.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.10.2017 அன்று பெறப்பட்டு, 057/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து எதிர்மனுதாரரின் அறிக்கை பெறப்பட்டதுடன், 20.03.2018 அன்று விசாரணையும் மேற்கொள்ளப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, தமிழ்நாடு கட்டுமானப் பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் சங்கம் என்ற பெயரில் கையொப்பமிடாத, சென்னை மாநகராட்சி மேற்பார்வைப் பொறியாளர் திரு L. நந்தகுமார் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து நடவடிக்கை எடுக்க கோரும் முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டது. முறையீட்டு மனுவினை தாக்கல் செய்த மேற்படிச் சங்கத்தின் முகவரி குறிப்பிடப்படவில்லை. மேலும், மேற்குறிப்பிட்ட பொறியாளர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு ஆதார ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர் திரு L.நந்தகுமார் அவர்களிடம் விளக்க அறிக்கை பெறப்பட்டது. மேலும், 20.03.2018 அன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டு வாக்குமூலமும் பெறப்பட்டது. விசாரணையின்போது தான் அளித்த அறிக்கையில் உள்ள விவரங்களையே வாக்குமூலமாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார்.

2. எதிர்மனுதாரர் தனது அறிக்கையில் மழைநீர் வடிகால் அமைப்பு ஏற்படுத்துவதற்கு ஜெர்மனி மற்றும் ஜப்பான் நாட்டினரிடமிருந்து எந்தவொரு நிதியுதவியும் பெறப்படவில்லை, மேலும் வேறு எந்தவித நிறுவனமும் ரூ.3,000/– கோடி மதிப்பிலான திட்ட உதவியும் வழங்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். தான் 01.08.2016 அன்றுதான் மழைநீர் வடிகால் திட்டப்பணியினை ஏற்றதாகவும், அதற்கு முன்பு 2016–ம் ஆண்டு பிப்ரவரி திங்களில் இது சம்பந்தப்பட்ட ஒப்பந்தப்பணிகள் வழங்கப்பட்டுவிட்டன எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள மேனகா கட்டுமான நிறுவனம் மற்றும் T.M.S. கட்டுமான நிறுவனத்திற்கு எந்தவொரு பணியும் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து, ஜவஹர்லால் நேரு நகர்ப்புற மறு சீரமைப்புத் திட்டப் பணிகளுக்கு ஒப்பந்தப் பணிகள் வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர்களின் பட்டியலையும் சமர்ப்பித்துள்ளார். எனவே, அரசுக்கு முழு ஒத்துழைப்பு நல்கி நல்ல முறையில் செயல்பட்டுவரும் தனது பணிக்கும், தனக்கும் குந்தகம் ஏற்படுத்தவே காழ்ப்புணர்ச்சிகளின் அடிப்படையில் தன் மீது குற்றச்சாட்டுகள் புனையப்பட்டுள்ளன எனத் தெரிவித்து தன் மீதான நடவடிக்கையை கைவிடுமாறு கோரியுள்ளார்.

3. எதிர்மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு எந்தவொரு ஆதார ஆவணங்கள் தாக்கல் செய்யாத நிலையிலும், முறையீட்டு மனுவில் மனுதாரரின் கையொப்பம் மற்றும் முகவரி குறிப்பிடப்படாத நிலையில், இம்முறையீட்டு மனு குறைபாடு உடையதாகவும் ஆதாரம் ஏதுமற்றதாகவும் கருதி அதனை தள்ளுபடி செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 26–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. திரு எல். நந்தகுமார்,
மேற்பார்வை பொறியாளர்,
சென்னை மாநகராட்சி,
ரிப்பன் கட்டிடம்,
சென்னை – 600 003.

2. மாநகராட்சி ஆணையர்,
சென்னை மாநகராட்சி,
ரிப்பன் கட்டிடம், சென்னை – 600 003.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்